# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.7 |
| Name | : | காயத்திரி |
| Father's / Husband Name | : | குமார் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 33/2025 |

**தேதி : 18.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை 2022ம் ஆண்டிலிருந்தே தெரியும். அவர் எங்கள் ஊர்தான். எனக்கு தனியார் வங்கியில் லோன் வாங்கி கொடுத்த வகையில் எதிரி எனக்கு பழக்கம். எதிரி எனக்கு அடிக்கடி லோன் வாங்கி கொடுப்பார். நான் கட்டிவிடுவேன். மேலும் எதிரி என்னிடம் அவசர தேவைகளுக்கு அவ்வப்போது பணம் வேண்டுமென்று சொல்வார். நான் பணம் அனுப்பிவைப்பேன். அவர் சரியாக திரும்ப கொடுத்துவிடுவார். அதனால் அவர் மீது நம்பிக்கை ஏற்பட்டது. எதிரி தன்னுடைய தேவைக்காக என்னிடம் 2023ம் ஆண்டு பணம் கேட்டார். நான் 2023ம் ஆண்டில் எதிரிக்கு ரூ.6,42,161/-ஐ பல தவணைகளில் என்னுடைய வங்கி கணக்கு மூலம் எதிரியின் G pay மற்றும் Phone pay கணக்குகளுக்கு அனுப்பிவைத்தேன். மேலும் எதிரியின் சகோதரிக்கு உடல்நிலை சரியில்லை என்று என்னிடம் சொன்னார். நான் அதற்காக அவரிடம் என்னுடைய மகளின் 3 கிராம் எடையுள்ள தோடு ஜிமிக்கியை

எதிரியிடம் கொடுத்தேன். லோன் தொகை அதிகமாகிவிட்டது என்றும் பணத்தை கட்டிவிடுங்கள் என்று எதிரியிடம் சொன்னேன். அவர் கட்டிவிடுவதாக சொன்னார். பணத்தைத கேட்டதற்கு வீட்டை விற்று தருவதாக சொன்னார். வங்கியில் ஐந்து லட்சம் ரூபாய் லோன் ்போட்டு என்னுடைய கடனை கொடுத்துவிடுவதாக சொன்னார். ஆனால் பணத்தை திரும்ப கொடுக்கவில்லை. நகையையும் திரும்ப கொடுக்கவில்லை.

எதிரி எங்கு போனார் என்று தெரியவில்லை. ஊரில் நிறைய பேரிடம் லோன் வாங்கி கட்டாமல் ஏமாற்றியதாக கேள்விபட்டேன். சுமார் மொத்தமாக 37 பேரை ஏமாற்றியதாக கேள்விபட்டேன். அதன்பிறகு புகார் கொடுக்க பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனைவரும் புகார் கொடுக்க சென்றோம். இதுசம்மந்தமாக சத்தியா என்பவர் ஜூலை மாதம் 2024 ஆண்டு புகார் கொடுத்தார். குற்ற பிரிவு போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி என்னுடைய பக்கத்து தெருவை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி எனக்கு 3 ஆண்டுகளாக தெரியும். எதிரி இதற்கு முன்பு எனக்கு லோன் வாங்கி கொடுத்துள்ளார். நான் 10 வங்கியில் லோன் வாங்கியுள்ளேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வருமான வரி கட்டியதில்லை. அவ்வப்போது என்னிடம் பணம் கேட்பார். நான் பணத்தை அனுப்பிவைப்பேன். எதிரி வாங்கிய கம்மலை திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் இல்லை. எதிரி என்னிடம் வாங்கிய ரூ.6,42,161/-ல் எவ்வளவு தொகையை மீதி செலுத்தினார் என்றால் பணம் எதுவும் திரும்ப தரவில்லை. நான் கொடுத்த பணத்தை எதிரி கொடுக்க

தயாராக இருந்தால் வாங்கிகொள்ள தயாராகவுள்ளேன். எதிரி என்னை திட்டமிட்டு ஏமாற்றவில்லை என்றாலும், எதிரியின் குடும்ப சூழ்நிலை காரணமாக அவரால் பணத்தை கட்ட முடியவில்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.